செ.வெ.எண்: 02
நாள்: 01.11.2018

## செய்திக்குறிப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அரசாணை(டி) எண்:612 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை (ட்டி2) நாள் 25.10.2018 வாயிலாக வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை 2011 முதல் 2016 வரையிலான ஆண்டுகளில் புதுபிக்கத் தவறிய பதிவுதாரர்கள் தங்களின் பதிவு மூப்பினை மீளப் புதுப்பிக்க உதவிடும் வகையில் 2018-2019 ஆம் ஆண்டில் சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இச்சிறப்பு புதுப்பித்தல் சலுகையை பெற விரும்பும் பதிவுதாரர்கள் https://tnvelaivaaippu.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக தங்களது பதிவை புதுப்பித்துக் கொள்ளலாம் அல்லது கோவை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டை மற்றும் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் நேரில் வந்தோ அல்லது பதிவஞ்சல் மூலமாக விண்ணப்பித்தோ தங்களின் பதிவை புதுப்பித்துக்கொள்ளலாம். இச்சலுகையானது 24.01.2019 வரை மட்டுமே வழங்கப்படும். இதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எனவே மனுதாரர்கள் இச்சலுகையை பெற்று பயனடையுமாறு கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவிக்கின்றார்.

[signature] 31.10.2018

மாவட்ட ஆட்சியர் (பொ)
கோயம்புத்தூர்